

தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவார்

God Arises in the Divine Assembly

Album 22 Song 1

Psalm 82–87: God’s Justice & Glory

Song 1 தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவார்

Psalm 82 – God stands in the divine council and judges the unjust "gods" (rulers) for partiality and oppression of the weak. He declares they will die like men. Call for God to arise and judge the earth.

தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவார்
தேவர்களின் நடுவிலே நியாயம் விசாரிப்பார்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே

எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச் செய்வீர்?
துன்மார்கருக்கு முகதாட்சினியம் பண்ணுகிறீர்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே

ஏழைகளுக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயங்கள் செய்து
சிறுமைப்பட்டவனுக்கு நீதியை செய்யுங்கள்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே

பலவீனனையும் எளியவனையும் விடுவித்திருங்கள்
துன்மார்க்கரின் கைகளுக்கு அவர்களைத் தப்புவியுங்கள்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே
தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவார்

KJC-DNN

தேவர்களின் நடுவிலே நியாயம் விசாரிப்பார்

அறியாமலும் உணராமலும் ஏன் இருக்கிறார்கள் ?
அந்தகாரத்திலே நடந்து தேசத்தின் அஸ்திபாரத்தை
அசைக்கிறீர்கள்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே

நீங்கள் தான் தேவர்கள் என்று நான் சொல்லியிருந்தேன்
நீங்கஎெல்லாரும் உன்னதரின் மக்கள் என்றும்
சொல்லியிருந்தேன்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே

KJC-DNN

இந்த பூமியிலே தேவனே எழுந்தருளும்
இந்த பூமிக்கே நியாயத்தீர்ப்பை நீர் செய்தருளும்

வருவாரே ! வருவாரே !
பூமியை நியாயந்தீர்க்க வருவாரே
தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவார்
தேவர்களின் நடுவிலே நியாயம் விசாரிப்பார்

